- இடைச்சொற்கள் → சாரியைகள், இடைநிலைகள், வேற்றுமை உருபுகள், உவமை உருபுகள், வினாவெழுத்துகள், சுட்டெழுத்துக்கள், அசைநிலை, உம்மை ஆகியன இடைச்சொற்களாக அமையும்.

எ.கா. :

தம்பியும், அண்ணனும் - (உம்)
இராமனைப் பார்த்தேன் - (ஐ)
கற்றதனா லாய பயனென் கொல் (அசைச்சொல்)

**உரிச்சொல்**

- செய்யுளுக்கே உரிமை பெற்று வரும் சொல். பெயர்ச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும், உரிமை பூண்டு அதை விளக்கவரும் சொல் உரிச்சொல் ஆகும்.

**ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்**

- சால, உறு, தவ, நனி, கூர், கழி - மிகுதிப் பொருளை உணர்த்தும்
- நனி, பேரை, கழி நல் குரவு, சாலவும் சிறந்தது, உறுபொருள்

**பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்**

- "கடி" - விரைவு, மணம், காவல், கூர்மை, அச்சம், புதுமை
- மேலும் - தா, மழ, மா, இரு, குரு போன்ற சொற்களும் உரியே ஆகும்.

**உரிச்சொல்:**

- சால, உறு, தவ, நனி, கூர், கழி, இச்சொற்கள் ஒரு சொற்றொடரில் வந்து "மிகுதி" என்னும் குணத்தை உணர்த்தி வரும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்படும்.
    - எ.கா. - சாலச் சிறந்தது. உறுப்பொருள் தவச்சிறிது நனி பேசினான் கழி உவகை
- இதேபோல் கடி என்பது பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் ஆகும்.
    - எ.கா. - கடிநகர், கடிவேல், கடிமுரசு, கடி மலர்

**தொகைநிலைத் தொடர்:**

- பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும், பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ, தொக்கி (மறைந்து) வருமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் எனக் கூறுவர். தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை:

வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை.

**வேற்றுமைத் தொகை:**

- ஒரு தொடரில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத் தொகை எனப்படும். எ.கா.: ஆத்திசூடி படித்தாள்.
- இத்தொடர் "ஆத்திசூடியைப் படித்தாள்" என விரிந்து நின்று பொருள் தருகிறது. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களுக்கும் இடையில் "ஐ" (இரண்டாம் வேற்றுமை உருபு) என்னும் வேற்றுமை உருபு மறைந்து நின்று பொருள் உணர்த்துகிறது.

| | | |
|---|---|---|
| **எ.கா.:** மோர் பருகினான் | - (ஐ) | - இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| தலை வணங்கு | - (ஆல்) | - மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| விழுப்புரம் சென்றான் | - (கு) | - நான்காம் வேற்றுமைத் தொகை |
| ஊர் நீங்கினான் | - (இன்) | - ஐந்தாம் வேற்றுமைத் தொகை |
| கம்பர் பாடல் | - (அது) | - ஆறாம் வேற்றுமைத் தொகை |
| கடல் வாழ் உயிர்கள் | - (கண்) | - ஏழாம் வேற்றுமைத் தொகை |

- ஐ - இரண்டாம் வேற்றுமை உருபு
- ஆல் - மூன்றாம் வேற்றுமை உருபு
- கு - நான்காம் வேற்றுமை உருபு
- இல், இன் - ஐந்தாம் வேற்றுமை உருபு
- அது, ஆது, அ - ஆறாம் வேற்றுமை உருபு
- இல், கண், இடம், உள், மேல் - ஏழாம் வேற்றுமை உருபு

# 4. வேற்றுமை

**வேற்றுமை**

- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும்.

**முதல் வேற்றுமை :**

- (எழுவாய்) இயல்பான பெயர் (எழுவாய்) பயனிலைக் கொண்டு முடியும்.
- தனியான உருபுகள் இதற்கு இல்லை. இயல்பான பயனிலை எழுவாயைக் கொண்டு முடிவது முதலாம் வேற்றுமை ஆகும்.

- ❖ வினைமுற்று, பெயர்ச் சொல், வினா - இவற்றை பயனிலையாகக் கொண்டு முடியும்.

சான்று:

| | | |
|---|---|---|
| கண்ணன் வந்தான் | - | வினை |
| அவன் கண்ணன் | - | பெயர் (வேற்றுமை உருபு இல்லை) |
| அவன் யார்? | - | வினா |

- ❖ மாடு வந்தது - வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.
- ❖ வளவன் என் தம்பி - பெயர்ப்பயனிலையைக் கொண்டு முடிந்தது.
- ❖ வளர்மதி யார் - வினாப்பெயர்ப் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

**இரண்டாம் வேற்றுமை (ஐ) (செயப்படு பொருள் வேற்றுமை)**

- ❖ ஒரு பெயர்ச்சொல்லின் பொருளை செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவது இரண்டாம் வேற்றுமை ஆகும். இரண்டாம் வேற்றுமை உருபு —— ஐ
- ❖ எ.கா : நிலத்தை உழுதான், பால் பருகினான் வளவன் செய்யுளைப் படித்தான்

1. ஆக்கல் 2. அழித்தல் 3. அடைதல் 4. நீத்தல் 5. ஒத்தல் 6. உடன்

ஆகிய அறுவகை பொருள்களில் இரண்டாம் வேற்றுமை வரும்.

- ✶ வளவன் பள்ளியைக் கட்டினான் - ஆக்கல்
- ✶ சோழன் பகைவரை அழித்தான் - அழித்தல்
- ✶ தேன்மொழி கோவிலை அடைந்தாள் - அடைதல்
- ✶ அழகன் சினத்தை விடுத்தான் - நீத்தல்
- ✶ கயல்விழி குயிலைப் போன்றவள் - ஒத்தல்
- ✶ கண்ணன் செல்வத்தை உடையவன் - உடைமை

**மூன்றாம் வேற்றுமை (ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்)**

- ❖ ஆல், ஆன் உருபுகள் கருவி கருத்தா ஆகிய இரு பொருள்களிலும் வரும். கருவி முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.
- ❖ எ.கா : நாரால் கயிறு திரித்தான்
  கையால் கயிறு திரித்தான்

- ❖ இதே போல் கருத்தாவும் இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா என இரு வகைப்படும்.
- ❖ எ.கா : கோவில் அரசனால் கட்டப்பட்டது-ஏவுதல் கருத்தா. தான் செய்யாமல் பிறரைச் செய்ய வைப்பது.
- ❖ ஓர் எழுவாயின் செயலுடன் பிறிதொன்றனது செயலும் உடனிகழ்வது உடனிகழ்ச்சிப் பொருள் எனப்படும்.
- ❖ கருவிப்பொருளில் கொண்டு என்ற சொல்லும், உடனிகழ்ச்சிப் பொருளில் உடன் என்ற சொல்லும் சொல்லுருப்புகளாக வரும்.
- ✶ நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது - ஆல்
- ✶ தூங்குகையான் ஓங்குநடை - ஆன்
- ✶ தாயோடு மகள் வந்தாள் - ஒடு
- ✶ தந்தையோடு தாய் வந்தாள் - ஓடு
- ✶ தந்தையுடன் தம்பி வந்தான் - உடனிகழ்ச்சி பொருள் வேற்றுமை

**நான்காம் வேற்றுமை (கு)**

- ❖ உருப்புகள் -கு, பொருட்டு, நிமித்தம்
- ❖ எ.கா: தலைவர் நந்தினிக்குப் பரிசு வழங்கினார்
- ❖ இராமன் பள்ளிக்குச் சென்றான்
- ❖ ஏழைக்கு உணவு கொடுத்தான்
- ❖ கூலியின் பொருட்டு பணி செய்தான்
- ❖ வேலையின் நிமித்தம் அயலூர் சென்றான்
- ❖ வேலன் மகன் - வேலனுக்கு மகன்
- ❖ நான்காம் வேற்றுமையானது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும்.
  - ✶ புலவர்க்குப் பரிசு கொடுத்தார் - கொடை
  - ✶ நோய்க்கு பகை மருந்து - பகை
  - ✶ பாரிக்கு நண்பர் கபிலர் - நட்பு
  - ✶ வீட்டுக்கு ஒரு பிள்ளை - தகுதி
  - ✶ வளையலுக்குப் பொன் - அதுவாதல்
  - ✶ கூலிக்கு வேலை - பொருட்டு
  - ✶ அனிதாவுக்கு மகன் அன்பரசு - முறை
  - ✶ திருத்தணிக்கு வடக்கு வேங்கடம் - எல்லை